# "தோற்றுவிட்டேன்" நாவலில் கு . கலியபெருமாள் அவர்களின் நூலகச் சிந்தனை

64

**இரா . வேதகனி ,**
**பச்சையப்பன் கல்லூரி**
**சென்னை 600030 .**

**ஆய்வுச்சுருக்கம்**

நாவலாசிரியர் கு . கலியபெருமாள் அவர்களின் "தோற்றுவிட்டேன்" நாவலில் இடம் பெறும் நூலகச் சிந்தனைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை எடுத்தியம்புகிறது . விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட குடும்பப் பின்னணியில் பிறந்தவன் , வேலவன் . படிப்பறிவில்லாத குடும்பத்தில் முதல் பட்டதாரியான வேலவன் முசிறி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேர்கிறான் . நாவலின் முடிவில் சி. பி. எஸ். சி பள்ளியைத் தொடங்கி அதன் அருகிலேயே கல்லூரியையும் தொடங்குகிறான் . வேலவனின் இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது அவனுடைய கல்லூரி நூலகமும் முசிறியிலுள்ள பொது நூலகமே ஆகும் . வேலவனின் இந்த வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய நூலகம் மற்றும் நூலகர் பற்றிய சிந்தனைகளை நாவலாசிரியர் கு . கலியபெருமாள் எங்ஙனம் எடுத்துரைக்கிறார் என்பதை இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம் .

**திறவு சொற்கள்**

நூலகம் - கதைக்களம் , நூலகச் சிந்தனைகள் , நூலகம் - தனிமனித முன்னேற்றம் , நூலகர் - வழிகாட்டி .

**முன்னுரை**

நாவலாசிரியர் கு . கலியபெருமாள் அவர்கள் நவீன இலக்கியச் சிந்தனையாளர் . தம்முடைய நாவல்களில் பரந்து விரிந்துப்பட்ட கதைக்களங்களை உள்ளடக்குவதில் மிகவும் கைத்தேர்ந்தவர் . "தோற்றுவிட்டேன்" நாவலில் கதைகளங்களாக வேலவனின் வீடு , விவசாய நிலம் , முசிறி கலை மற்றும் அறிவியல் கல்லூரி , கல்லூரி விடுதி அறை , அரசு பொது மருத்துவமனை , அரசு மனநல மருத்துவமனை , சென்னையில் மெடிக்கல் கவுன்சில் நடைபெறும் கல்லூரி , வங்கி , துறையூர் காவல் நிலையம் , வேலவன் சரக்குந்து உதவியாளராகவும் ஓட்டுநராகவும் பணிபுரியும் போது பல மாநிலங்களும் பல ஊர்களும் கதைகளங்களாக அமைந்துள்ளது . ஆனால் , வேலவன் படிக்கும் கல்லூரியின் நூலகமே அவனுடைய வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தியக் களமாக அமைந்துள்ளது . இன்றைய காலக்கட்டத்தில் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மிகுந்து காணப்படுவதால் இளைஞர்கள் பலரும் நவீன சாதனங்களான முகநூல் , புலனம் , குறுஞ்செய்தி போன்றவற்றில் தங்களுடைய பொன்னான நேரத்தை வீணாகக் கழித்து நாட்களைக் கடத்துகிறார்கள் . இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பாடமாக இந்நாவல் அமைகிறது . எப்படிப்பட்ட ஏழ்மை சூழ்நிலையில் ஒருவன் பிறந்திருந்தாலும் நூலகப் பயன்பாட்டால் அவன் வாழ்வின் சிகரத்தைத் தொட முடியும் என்ற பேருண்மையை இந்நாவலாசிரியர் கு . கலியபெருமாள் அவர்கள் நமக்கு எடுத்துக்

காட்டுகிறார் . சிறு கிராமத்திற்குள் முடங்கிக் கிடந்த வேலவனை நூலகம் எவ்வாறு பள்ளி மற்றும் கல்லூரித் தாளாளராக மாற்றியமைக்கிறது என்பதை இவ்வாய்வுக் கட்டுரையில் அறியலாம் .

**ஆய்வின் மதிப்பாய்வுரை**

வேலவனே இந்நாவலின் தலைமை கதைமாந்தர் ஆவான் . நாவலில் முக்கிய கதைமாந்தர்கள் எங்கெங்குப் பயணப்படுகிறார்களோ அவை முக்கிய கதைக்களமாக அமைகிறது . இந்நாவலில் வேலவன் பல்வேறு கதைக்களங்களில் சித்தரிக்கப்பட்டாலும் இவனுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கு பெரும் திருப்புமுனையாக அமையும் கதைக்களம் நூலகமே ஆகும் . உலகின் பேரறிவாளர்கள் பலரும் நூலகத்தின் மூலமாகவே செதுக்கப்பட்டவர்கள் எனலாம் . அதற்கு சிறந்த உதாரணமாக பேரறிஞர் அண்ணா , கணித மேதை இராமானுஜன் மற்றும் தாஸ் கேப்பிட்டல் நூலை இயற்றிய கால்மாக்ஸ் போன்றவர்களை எடுத்துக்கொள்ளலாம் . நாவலாசிரியர் கு . கலியபெருமாள் அவர்களின் கதைக்களமான நூலகம் எவ்வாறு உலகச் சிந்தனையாளர்களுடைய நூலகச் சிந்தனைகளோடு ஒத்துப் போகிறது என்று இவ்வாய்வுக் கட்டுரை தெளிவாக எடுத்துரைக்கிறது .

**ஆய்வின் நோக்கமும் பயன்பாடும்**

சமுதாயத்தில் நிலவி வரும் குற்றங்களுக்குப் பெரிதும் காரணமாக அமைவது இன்றைய மாணவர்களுக்குத் தங்களுடைய நேரத்தை எப்படி பயனுள்ளதாகக் கழிப்பது என்ற அறிவின்மையே ஆகும் . பல இடங்களுக்குச் சென்று தேவையில்லாத பல பொழுதுபோக்குகளுக்கும் தங்களுடைய வாழ்வில் இடம் கொடுப்பதால் சமுதாயத்தில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாகிறது . பயனுள்ள வழியில் நூலகம் சென்று தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டு நல்வழியில் பாதை அமைத்துக் கொண்டால் குற்றச் செயல்கள் குறைந்துவிடும் . நூலகம் என்பது புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்ட கட்டிடம் கிடையாது . மனித மனங்களை ஒரு முகப்படுத்திச் சீர்படுத்தும் ஒரு கோவிலாக விளங்கக் கூடியது . இந்த உண்மையை இன்றைய மாணவர்கள் உணர்வது அவசியம் . சிறுகதை , நாவல் எதுவாயினும் கதை நகர்ந்து செல்லும் அல்லது நடைபெறும் இடம் , காலம் , சூழல் இவற்றை காட்டுவதே கதைக்களம் ஆகும் . "தோற்றுவிட்டேன்" நாவலில் தலைமை கதைமாந்தரை வாழ்வில் வெற்றிப் பெற செய்யும் கதைக்களமான நூலகத்தின் முக்கியத்துவத்தை பின்வரும் ஆய்வாளர்களுக்கு எடுத்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும் .

வளர்ந்து வரும் நவீன யுகத்தில் அதிநவீன அறிவியல் தொழில்நுட்ப கருவிகள் நம் கைகளுக்குள் உலகைக் காட்டிவிடுகிறது . இதன் பக்க விளைவாக சமுதாயத்தில் பல குற்றச் செயல்கள் மலிந்துக் காணப்படுகின்றன . பிரெஞ்சு கவிஞரும் எழுத்தாளரும் மனித உரிமைகள் ஆர்வலருமான விக்டர் யூகோ அவர்கள் "ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது சிறைச்சாலை ஒன்று மூடப்படுகிறது"[1] என்று தம் படைப்புகளில் குறிப்பிடுகிறார் . இவருடைய இச்சிந்தனை இந்நாவலின் தலைமை கதைமாந்தரான வேலவனின் வாழ்க்கையிலும் காணப்படுகிறது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வெளிக்கொணர்கிறது என்பதை அறியலாம் . இன்றைய மாணவர்களுக்கு இவ்வாய்வுக் கட்டுரை நூலகச் சிந்தனைகளை மனதில் விதைப்பதாக உள்ளது . இதுவே இக்கட்டுரையின் பயன்பாடாகும் .

**ஆய்வின் குறிக்கோள்**

"நூலகம் என்பது நவீன நாகரீகத்தின் வெளிப்பாடு ஆகும் . பின்னிப்பிணைந்த இன்றைய நிலையில் நூலகம் சமூகத்தின் முக்கிய அங்கமாக திகழ்கிறது"[2] என்று கூறிய அமெரிக்க நீதிபதியான பியர்ஸ் பட்லரின் நூலகச் சிந்தனைகளை "தோற்றுவிட்டேன்" நாவலை வாசிக்கும் போது நம்மால் உணர முடியும் . நூலகத்தால் வேலவனுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளைப் பற்றிக் கூறுவதே இவ்வாய்வின் குறிக்கோளாகும் .

**வேலவனின் குடும்பச் சூழல்**

உப்பிலியாபுரம் பக்கத்திலிருக்கும் சோபனபுரம் ஊரில் தான் வேலவனின் குடும்பம் வசித்து வந்தது . அவன் குடும்பத்திற்கு மட்டுமல்ல அந்த ஊருக்கே படிப்பு வாசமென்பதே சிறிதும் தெரியாது . உள்ளூர் பள்ளிக்கூடத்தில் பன்னிரண்டாம் வகுப்பு முடித்துவிட்டு அந்த மதிப்பெண் பட்டியலையும் பள்ளிக்கூடத்திற்குச் சென்று வாங்காமல் காலம் தாழ்த்துகிறான் வேலவன் . காரணம் அவன் தந்தை கொளஞ்சியால் அவனை மேற்படிப்புக்காகக் கல்லூரியில் சேர்க்க முடியாது என்பதை அவன் அறிந்திருந்தான் . ஆனால் , மனதிற்குள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பெரிய மருத்துவராக வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தான் . இது தலைமை கதைமாந்தரான வேலவனுடைய ஆசை மட்டுமல்ல அவனுடைய தந்தை கொளஞ்சி பாட்டி குஞ்சம்மாவின் வாஞ்சையுமாக இருந்தது . நீட் தேர்வு அறிமுகமாவதற்கு முன்னுள்ள கதையாக வேலவன் கதை அமைகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் .

**வறுமையின் கொடுமை**

வேலவன் பன்னிரண்டாம் வகுப்பில் ஆயிரத்து நூறு மதிப்பெண் எடுத்திருந்தும் வறுமையின் காரணமாக மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி இரண்டிலும் சேர முடியாமல் ஒரு வருடம் கல்வியில்லாமல் வீணாகக் கழிந்தது . அந்த ஒரு வருடத்தில் சரக்குந்து ஓட்டுநர் பணிக்குச் சென்று முப்பதாயிரம் சம்பாதித்தான் .

**முசிறி கலை மற்றும் அறிவியல் கல்லூரி நூலகம்**

மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரியென தன் கனவுகளை மூட்டைக் கட்டி விட்டு தன் குடும்பச் சூழலுக்கு ஏற்றபடி அரசு கல்லூரியில் சேர்ந்து கல்லூரி விடுதியில் வேலவன் தங்கிப் படிக்கிறான் . அவனுடன் தங்கும் சக மாணவர்கள் தேவையில்லாத இடங்களுக்கு செல்வதும் வீண் வேலைகளை செய்வதுமாக இருக்கும் போது வேலவன் மட்டும் தன்னுடைய நேரத்தை வீணாகக் கழிக்க விரும்பாமல் பயனுள்ளதாக்கிக் கொண்டான் . ஏழை மாணவனால் எல்லா புத்தகங்களையும் விலை கொடுத்து வாங்க முடியாதல்லவா , ஆதலால் , முதல் நாளே முதல் மாணவனாக கல்லூரியின் நூலகத்திற்குச் செல்கிறான் . "கல்வி கற்பிக்கும் எந்த ஒரு கல்வி நிலையத்திற்கும் மிக முக்கியமான பகுதியாக நூலகம் இருக்கும் . நூலகம் இல்லாத கல்லூரியோ , பல்கலைக்கழகமோ வெற்றுச் செங்கற்களாலான கட்டிடம் தான்"[3] என்ற சர் சி.வி. ராமன் அவர்களின் பொன்மொழிக்கு ஏற்ப முசுறி கலைக்கல்லூரி நூலகம்

வேலவனுக்குச் சிறப்பாக அமைந்தது . பல்கலைக்கழக மானியக் குழு (UGC) மற்றும் உயர் கல்வி துறைகள் அனைத்தும் நூலகத்தின் முக்கியத்துவம் பற்றி நமக்கு பறைசாற்றிக் கொண்டிருந்தாலும் இன்றைய மாணவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை . நூலகத்தைச் சரியாகப் பயன்படுத்தியவர்களே சமுதாயத்தில் நல்ல நிலையை அடைந்திருப்பதை நாம் கண்கூடாக காண முடிகிறது .

**நூலகர் முருகேசன்**

"புத்தகமும் நண்பர்களும் குறைவாகவும் நல்லதாகவும் இருக்க வேண்டும்"[4] என்று ஸ்பெயின் என்னும் அறிஞரின் கூற்றுபடி நூலகர் முருகேசன் வேலவனுக்கு நல்ல நண்பராகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறார். போட்டித் தேர்வுகள் எழுதி அரசாங்க வேலையில் சேர்ந்து நல்ல நிலைக்கு வரவேண்டுமென்று அடிக்கடி ஊக்கப்படுத்தினார் . "புத்தக வாசிப்பில் நல்ல மகிழ்ச்சியும் உற்சாகமும் கிடைக்கின்றது . புதிய புதிய நூல்களைப் படிப்பதிலுள்ள எனது ஆர்வம் குறைவதேயில்லை"[5] என்று பில்கேட்ஸ் தனது வாசிப்பு அனுபவத்தை கூறுகிறார். வேலவனுக்கும் புத்தகம் வாசிப்பதில் ஆர்வம் உள்ளதை நூலகர் முருகேசன் அறிந்து நல்ல நூல்களைப் தேடிப் படிக்கும்படி வழிகாட்டினார்.

**கல்லூரித் தேர்தல்**

தேர்தல் நாட்களில் விடுதியறையில் வேலவனுக்கு வேற்று சாதி மாணவர்கள் தொல்லைக் கொடுக்க கல்லூரி நூலகத்தையே நாடி வருகிறான் . நூலகர் முருகேசனின் அறிவுரைபடி சிறிது காலம் விடுமுறை எடுத்துக்கொண்டு முசிறி பொது நூலகத்திற்குச் சென்று விடுகிறான் . "நாம் எழுத்தால் புத்தகத்தால் சண்டையிடுகிறோம்"[6] என்ற வில்லியம் சேக்ஸ்பியர் அவர்களின் வாக்கின்படி கல்லூரித் தேர்தலென்னும் சாதிக் கலவரத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் தன்னை மேன்மேலும் உயர்த்திக் கொள்ள எழுத்துக்களோடும் புத்தகங்களோடும் சண்டையிட நூலகமே கதியென்று இருந்தான் , வேலவன்.

**வேலவனின் இலட்சியமும் நூலகரின் வழிகாட்டுதலும்**

நன்றாகப் படித்து ஒரு அரசாங்க வேலையில் அமர்ந்து தன்னுடைய தந்தை கொளஞ்சியையும் பாட்டி குஞ்சம்மாவையும் எந்த குறையுமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கனவுடன் இருக்கிறான் . ஆனால் , அவனுடைய ஆசை நிராசையாகி விடுகிறது. காதல் வயப்பட்டதால் அவனுடைய கல்விப் பாதியிலேயே நிறுத்தப்படுகிறது . சூழ்நிலைகள் வெவ்வேறாக மாறவே கொளஞ்சியும் குஞ்சம்மாவும் உயிர் துறக்கிறார்கள் . வேலவனின் இக்கட்டான சூழ்நிலையில் நூலகர் முருகேசன் பண உதவி செய்து தகுந்த ஆலோசனையும் கூறுகிறார் . அவருடைய அறிவுரைப்படி வேலவனும் அவன் மனைவி முருகேஸ்வரியும் பிழைப்பிற்காக சென்னை நோக்கிப் பயணப்படுகிறார்கள் .

**தொலைதூரக் கல்வியும் வேலவன் வெற்றியும்**

சென்னைக்கு வந்து ஐந்தாண்டுகள் சொல்ல முடியாத துயரங்களை அநுபவித்த பிறகு முருகேஸ்வரியின் வற்புறுத்துதலால் விட்டுப் போன இளங்கலை மற்றும் முதுகலை தாவரவியல் படிப்பை முடிக்கிறான் , வேலவன் . வேலவனோ வெறும் பட்டத்திற்காக படிக்காமல் ஆய்வாளராக வேண்டும் என்ற இலட்சியத்துடன் படித்தான் . "புத்தகமென்பது வெறும் புத்தக மட்டுமன்று ; புத்தகத்தைத் தொடுபவன்

மனிதனையே தொடுபவனாகிறான்"[7] என்ற அமெரிக்க கவிஞரின் சிந்தனையின்படி வேலவன் புத்தகத்தின் மீது மிகவும் ஆர்வம் உடையவனாக இருந்தபடியால் அவனால் தொடர்ந்து தொலைதூரக் கல்வியில் படித்து முடித்து தேர்ச்சிப் பெற முடிந்தது . அதற்கு காரணம் படிப்பில் அவனுக்கு இருந்த ஆர்வமும் நூலகம் அவனுக்குள் ஏற்படுத்திய தாக்கமும் தான் .

**பள்ளி , கல்லூரித் தாளாளர்**

குடும்பத்தில் முதல் பட்டதாரியான வேலவன் தன் பிள்ளைகளின் படிப்பிற்காகவும் மற்ற சூழ்நிலையின் காரணமாகவும் தனது ஆய்வாளர் கனவை கைவிட்டு வியாபாரத்தில் இறங்குகிறான் . தன்னுடைய வியாபாரத்தில் வேலவன் நேர்மையாகவும் கடின உழைப்புடனும் இருந்ததால் சீக்கிரத்தில் முன்னேறுகிறான் . நல்லதொரு நிலைமைக்கு வந்த பிறகு கூடுவாஞ்சேரியில் ஒரு நிலத்தை வாங்கி முதலாவது ஒரு சி.பி.எஸ்.இ பள்ளிக்கூடம் திறக்கிறான் . அதன் பிறகு பள்ளிக்கூடத்தின் அருகிலேயே கல்லூரியும் துவங்கி நிறைய மாணவர்கள் படிக்க வழி வகுக்கிறான் . கல்வி நிறுவனங்களின் துவக்க விழாவில் நூலகர் முருகேசனின் காலில் விழுந்து ஆசி பெறுகிறான் . தகப்பனை இழந்த வேலவனுக்கு தகப்பன் ஸ்தானத்திலிருந்து ஆசிகளை வழங்கி வாழ்த்துகிறார் , நூலகர் முருகேசன் . "என் நூலகம் எனக்கு அரியணையை காட்டிலும் பெரியது"[8] என்று ஷேக்ஸ்பியர் தன்னுடைய நூலகம் குறித்து பெருமிதம் கொள்கிறார். இந்நாவலிலும் வேலவன் வாழ்வில் வெற்றிப் பெற்று அரியணை ஏறுவதற்கு காரணமாக அமைந்தது நூலகமே என்று நம்மால் உணர முடிகிறது .

**ஆய்வின் தொகுப்பும் முடிவுரையும்**

☐ இன்றைய தலைமுறையினர் நூலகத்தின் பயன்பாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது .

☐பல்வேறு நவீன இலக்கியங்களில் ஆங்காங்கே நூலகம் பற்றிய குறிப்புகள் காணப்பட்டாலும் இந்நாவலாசிரியர் கு. கலியபெருமாள் அவர்கள் நூலக பயன்பாடு குறித்தும் நூலகத்தில் பணி புரியும் நூலகர் எப்படி தனி மனித வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார் .

☐ நூலகம் மட்டுமல்லாமல் நூலகத்தில் பணி புரியும் நூலகரும் மாணவனுக்கு ஊன்றுகோலாக இருக்கிறார்கள் என்ற உண்மையும் இக்கட்டுரையில் நமக்கு தெளிவுபடுத்துகிறது .

☐ நூலக அறிவியல் தந்தையான சீர்காழி இராமாமிருதம் அரங்கநாதன் (S.R.Ranganathan) அவர்களின் உழைப்பினாலும் முயற்சியினாலும் இன்று நூலகங்கள் அவருடைய வழிகாட்டுதலின் செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கின்றன . அன்னாரின் வரலாற்றையும் செயல்பாடுகளையும் குறித்து இன்றைய மாணவர்கள் அறிந்து கொள்ளுதல் அவசியம் ஆகும் . இவரைப் போன்றே இந்நாவலிலும் நூலகர் முருகேசன் அவர்கள் தலைமை கதைமாந்தரான வேலவனின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறார்

☐ கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி . நூலகமில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதை இன்றைய புது மொழியாகக் கொண்டு நூலகம் நோக்கி மாணவர்கள் சென்று தங்களது அறிவையும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரை நமக்கு உணர்த்தும் பாடமாகும் .

☐ இந்நாவலின் தலைமைக் கதைமாந்தரான வேலவனைப் போல இன்றைய இளைஞர்களும் நூலகத்தினைப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதே இந்நாவலாசிரியர் கு . கலியபெருமாள் அவர்களின் சிந்தனையாகும் .

**அடிக்குறிப்புகள்**

1) கு . இராசேந்திரன் , நூலகச் சிந்தனைகள் , பக்கம் 88 .

2) முனைவர் ப . பாலசுப்பிரமணியன் , நூலக வளர்ச்சியில் இந்தியா , பக்கம் 15 .

3) கு . இராசேந்திரன் , நூலகச் சிந்தனைகள் , பக்கம் 89.

4)பி.வி.கிரி , வீட்டு நூலகம் , பக்கம் 27 .

5) முனைவர் ச.அ. சம்பத்குமார் , புத்தகமும் புதுயுகமும் , பக்கம் 65.

6) கு . இராசேந்திரன் , நூலகச் சிந்தனைகள் , பக்கம் 95.

7)பி.வி. கிரி , வீட்டு நூலகம் , பக்கம் 25 .

8) கு . இராசேந்திரன் , நூலகச் சிந்தனைகள் , பக்கம் 98.

**துணை நூற்பட்டியல்**

1) முதன்மை நூல் - தோற்றுவிட்டேன் , நாவலாசிரியர் கு . கலியபெருமாள் , எஸ் கே எம் பதிப்பகம் , சென்னை 48 , பதிப்பு ஆண்டு 2017

2) நூலகச் சிந்தனைகள் , கு . இராசேந்திரன் , அன்னை அருள் மறுதோன்றி அச்சகம் , புதுச்சேரி - 605001 , பதிப்பு 2003.

3) நூலக வளர்ச்சியில் இந்தியா , முனைவர் ப . பாலசுப்பிரமணியன் , சங்கர் பதிப்பகம் , சென்னை 49 , பதிப்பு 2016.

4) வீட்டு நூலகம் , பி.வி.கிரி , மணிவாசகர் பதிப்பகம் , சென்னை 108 , பதிப்பு 2005 .

5) புத்தகமும் புதுயுகமும் , முனைவர் ச.அ.சம்பத்குமார் , வெங்கடேஷ் பதிப்பகம் , கும்பகோணம் , பதிப்பு 2017.